முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் சுக்கிர பகவான் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

02.02.2019, சனிக்கிழமை

1. **யோக சித்தனே ஞானத்தலைவனே**
**உயிர் காக்கும் சுத்தநெறி கொண்ட**
**யோகநாதனே ஆறுமுக அரங்கனே**
**உலகத்தில் உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி கலை திங்கள்**
**தெரியவே மூவாறோர் திகதி காரி வாரம்**
**(விளம்பி வருடம் தை மாதம் 19ம் நாள் 02.02.2019, சனிக்கிழமை)**
**தேசிகனுக்கு சுக்கிர பகவான் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர்வாக ஞான உபதேசம் தரும்
ஞானதேசிகன் ஆன்மீக நெறியை
ஞாலமதில் பின்பற்றி மக்கள் வர
4. வருகவே உண்மை ஞானநெறி
வல்லமைபட மக்களிடை பரவி
முருகப்பெருமான் ஆளுமை படவே
முழுமைபட தரும உலகமாகும்
5. ஆகுமே அரங்கன் சீடர்கள் மூலம்
ஆகுமே அரங்கன் கொள்கை மூலம்
வகைபட ஆபரணம் தூசு என
வணிகம் செய்யும் மக்களெல்லாம்
6. எல்லோரும் வணங்கி வந்து
ஏழாம் படை வீட்டு ஞானியரின்
வல்லமைமிக்க தருமத்தில் உதவி
வலுவான தீட்சை ஆசி பெற்று
7. ஆசி பெற்று அகலா தொடர வளம்
அன்னதான சேவை மூலம்
நேசமான தயவு நெறி பெருக்க
ஞானவான்களாகி உலக மக்கள்
8. மக்களெல்லாம் அரங்கன் தேடிய
மகான்களெனும் சூட்சும உலகில்
தேக்கமில்லா சக்தி பெருக்கம் கூடி
தேசிகனார் தேடல்படி தேறுவர்
9. தேறுவர் பிறவா பெருவாழ்வுபட
தெய்வீக நெறி காட்டும் அரங்கன்
ஆறுதலான வழிகாட்டிடும் உண்மை
அகத்தியர் சன்மார்க்கமே உலகை வெல்லும்
10. வெல்லும் உலகப் பேரிடரை
வெல்லும் உலகியல் துன்பங்களை
இல்லாமை விரட்டி காக்கின்ற தவசி
எங்களின் சக்தி கொண்ட அரங்கன்

11. அரங்கனை அணுகி ஜீவனம்
ஆன்மீக ஞானம் இல்லறமென
வரங்கள் கேட்போர் வாழ்வில்
வற்றாத சித்தியும் வெற்றியும் இலகுவாகும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சுக்கிரபகவான் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

ஏராளமாய் யோகங்களை செய்து வெற்றி கண்டிட்ட யோகசித்தனே ஞானம் வென்ற ஞானத்தலைவனே உலக மக்களின் உயிர்களை காத்து கடைத்தேற்றும் வல்லமைமிக்க சுத்தநெறியை அளித்து உலக உயிர்களை காக்கும் யோகநாதனே முருகப்பெருமானின் அவதாரமே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் தை மாதம் 19ம் நாள் 02.02.2019, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே சுக்கிரபகவான் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுக்கிரபகவானாகிய வெள்ளி பகவான்.

உயர் ஞானத்தை எளிமையாக உபதேசமாக தந்தருளும் ஞானதேசிகன் அரங்கனின் ஆன்மீக தூயநெறியினை உலக மக்கள் பின்பற்றி வரவர, உண்மை ஞானநெறி வல்லமையுடன் மக்களிடையே பரவி முருகப்பெருமானின் தலைமையில் ஞானஆட்சி உலகினில் உண்டாகி உலகினில் தர்மத்தின் அடிப்படையினால் ஆகிய தர்மஉலகம் உண்டாகும்.

**உலகம் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் உத்தம சீடர்களின் மூலமாக தர்ம உலகமாக ஆகிடும் அரங்கனின் கருணையே வடிவான ஞானக்கொள்கைகள் மூலம் தர்ம உலகமாக ஞானஉலகமாக ஆகிடும்.**

பொன், வெள்ளி மற்றும் உலோக ஆபரணங்கள் செய்யும் ஆபரண தொழிலாளர்களும், வணிகர்களும், நூல், பஞ்சு, துணி மற்றும் ஜவுளி தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும், வணிகர்களும் ஆறுமுக அரங்கமகா தேசிகளை வணங்கி பயபக்தியுடன் திருவடி பணிந்துமே ஏழாம் படை வீடாய் துறையூர் ஓங்காரக்குடிலினை அமைத்து உலகம் நலம்பெற அளவிலாது தர்மங்களை செய்யும் அரங்கனின் தானதருமப்பணிகள் வளர்ந்திட தொண்டுகள் செய்தும், பொருளுதவிகள் செய்தும் வருவதுடன் அரங்கனின் திருவடி வணங்கி தீட்சை உபதேசம் பெற்றிட வேண்டும்.

அரங்கனின் திருவடி பணிந்து தீட்சை உபதேசம் பெற்று அரங்கனின் ஞானக் கொள்கைகளை ஏற்று அதனை வாழ்வினில் தவறாமல் பின்பற்றி அரங்கனை விட்டு அகலாது பின்தொடர்ந்து, தொடர்ந்திட வளம்பல பெறுவார்கள். அரங்கனின் அன்னதான சேவைகளில் பங்களிப்பு செய்து தொண்டுகள் செய்து உலகினில் தயவு நெறியை பெருக்கி வர, அவர்களெல்லாம் அரங்கன் அருளால் ஞானவான்களாக ஆகிடுவதோடு அரங்கன் விரும்புகின்ற மகான்கள் எனும் சூட்சும உலகினில் தடையின்றி ஞானசக்தி பெருகிட தேசிகனாரின் அருளாசியினாலும், அன்பினாலும் ஜென்மத்தைக் கடைத்தேற்றுவர்.

இனி பிறவா நிலை எனும் பிறவா பெருவாழ்வினை வாழ்ந்திட தெய்வீக நெறியினை உலகோர்க்கு அளித்து உலக மக்களை ஆறுதலாய் வழிநடத்தும் அரங்கனின் எளிமையும் இனிமையும் வல்லமையும்மிக்க ஞானவழியினை காட்டுகின்ற அகத்தியர் சன்மார்க்கமே இவ்வுலகை வெல்லும் ஒரே மார்க்கமாகும்.

அரங்கனின் அகத்தியர் சன்மார்க்க சங்கமே உலகினர்க்கு உண்டாகிய இயற்கை பேரிடர்களை வென்று உலகைக் காக்கும் வல்லமைமிக்க சங்கமாகும்.

அகத்தியர் சன்மார்க்க சங்கமே மக்களின் உலகியல் துன்பங்களை நீக்கி அவர்களை துன்பம் இல்லாத வாழ்வினை வாழ வைக்கும் வல்லமைமிக்க சங்கமாகும்.

உலகின் இயற்கை பேரிடர்களை, மக்களின் துன்பங்களை இல்லாமை எனும் ஏழ்மை நிலையை உலகினிலிருந்து விரட்டி மக்களை காக்கின்ற மகா தவசி ஞானிகள் எங்களின் சக்தியை முழுமையாக ஒன்றிணைந்து பெற்றிட்ட மகா ஞானி யுகமாற்ற தலைவன் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை அணுகி அவர்தம் திருவடி பணிந்து அவரவரும் தமது வாழ்வாதாரத்திற்காகவும் ஆன்மீக ஞானத்திற்காகவும், இல்லற நலனிற்காகவும் வரங்களை கேட்டிட அவர்கள் வாழ்வினிலே அரங்கனின் கருணையாலே வற்றாத வெற்றிகளையும் சித்திகளையும் எளிமையாக பெற்று சிறப்பான வாழ்வினை வாழ்வார்கள் என கூறுகிறார் மகான் சுக்கிரபகவான்.

–சுபம்–